செய்தி வெளியீடு எண்: 295 நாள்: 21.4.2008

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தூர்வாரும் இயந்திரத்தை இயக்கி துவக்கி வைத்தார்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 2006-07 மானியக் கோரிக்கையின்போது ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் கழிவுநீரகற்றல் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்கப்படுமென்று அறிவித்தார்கள். அதன்படி, சென்னைக்குடிநீர் வாரியத்தால் பாதுகாப்பு உபகரணங்கள் இப்பணியாளர்களுக்கு வழங்கப்பட்டன. தற்போது, நடப்பு ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இதுபோன்ற பணியாளர்கள் கழிவுநீர் நுழைவாயில்களில் இறங்கிப் பணிபுரிவதைத் தவிர்க்கும் பொருட்டு சிறப்பு இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் என்று 20.03.2008 அன்று அறிவித்தார்.

தற்போது சென்னை மாநகரில் சுமார் 2671 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள் மற்றும் சுமார் 77,081 நுழைவாயில்கள், 185 கழிவுநீரேற்று நிலையங்கள் உள்ளன. இவற்றில் சேரும் கழிவுநீர் கழிவுகளை சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், கழிவுநீர் நுழைவாயில்கள்/கிணறுகள் ஆகியவற்றில் இறங்கி கழிவுகளை அகற்றும் நிலையை மாற்ற, தூர்வாரும் இயந்திரங்களை முதன்முறையாக அறிமுகப்படுத்தவுள்ளது. இந்த இயந்திரத்தின்மூலம், 32 அடி வரை ஆழமுள்ள கழிவுநீர் நுழைவாயிலில் படிந்துள்ள தூர் மற்றும் கழிவுகளைக்கூட அகற்ற முடியும். மேலும், எடுக்கப்படும் இக்கழிவுகள் உடனடியாக அதே வாகனத்தில் அதற்கென்று பொருத்தப்பட்டுள்ள சேகரிப்பு அமைப்பில் சேகரிக்கப்பட்டு அகற்றப்படும். இதனால், கழிவுநீர் நுழைவாயில்/கிணறுகளில் பணியாளர்கள் இறங்கி பணிபுரியும் நிலை தவிர்க்கப்படும்.

தற்பொழுது முதற்கட்டமாக மூன்று இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. ஒரு இயந்திரத்தின் மதிப்பு ரூபாய். 5,85,390/- ஆகும். இவ்வியந்திரங்களின் செயல்பாட்டினை மூன்று மாதங்கள் ஆய்வு செய்தபின், மேலும், இதுபோன்ற இயந்திரங்கள் வாங்கப்பட்டு பணியாளர்கள் கழிவுநீர் நுழைவாயில்களில் இறங்கும் நிலை சென்னை மாநகரில் முற்றிலும் தவிர்க்கப்படும். மேலும், படிப்படியாக, மற்ற மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இந்த மூன்று இயந்திரங்கள் மூலம் கழிவுநீர் கழிவுகளை அகற்றும் பணிகளை இன்று (21.04.2008) காலை திருவல்லிக்கேணி வாலாஜா சாலையில் இயக்கி துவக்கி வைத்தார். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் திரு. கே.தீனபந்து, இ.ஆ.ப., அவர்கள், சென்னைக் குடிநீர்வாரிய நிர்வாக இயக்குநர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப, அவர்கள், சென்னைக் குடிநீர் வாரிய செயல் இயக்குநர் திரு. சி. தங்கசாமி, இ.ஆ.ப., அவர்கள், சென்னைக் குடிநீர் வாரிய நிதி இயக்குநர் திரு.மு. கருணாநிதி, இ.த.க.ப., அவர்கள், சென்னைக் குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர் திரு. துரை. மாதவ மூர்த்தி அவர்கள், சென்னைக் குடிநீர் வாரிய தலைமைப் பொறியாளர்திரு. ஞான. இளங்கோவன் அவர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

**வெளியீடு:: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**

* * *